8 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


“ சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே ”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 13-2-33

பாலுக்கும் காவல்;
பூனைக்கும் தோழன்.



ஸாமுயேல் ஹோர் என்ற இந்தியா மந்திரி பெரிய சிப்பாயாக இருக்கின்றார். “இந்தியாவின் சுய ஆட்சி இயக்கத்திற்கு உதவுகின்ற அதே சமயத்தில் பிரிட்டிஷ் நலத்தையும், ஏகாதிபத்திய நன்மையையும் கவனித்தே தீருவோம்” என்று கூறியிருக்கின்றார். ‘இந்தியா’ என்ற பால் கிண்ணியைக் காவல் காப்பதாக வந்தவர் ஸாமுயேல் ஹோர். ‘பிரிட்டிஷ் நலம்’ என்ற பூனைக்கும் அதே சமயத்தில் அவர் தோழனாயிருக்க விரும்புகின்றார். பலன் என்னவாகு மென்று சொல்ல வேண்டுமா? ‘நீ ஒரு ஸ்பூன்; நானொரு ஸ்பூன்’ என்று தொடங்கி கடைசியில் பாத்திரமே காலியாகி விடும்.

உஷார்! ஜாக்ரதை !

"நாமிருக்கும் நாடு
நமதென்பதறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம்
என்பதறிந்தோம்'

என்ற வீர வசனங்களை உள்ளத்திலிருத்தி இந்தியர் விடுதலை வேட்கை கொண்டு வெளிப் போந்து விட்டார்கள். 'வெஸூவியஸ்' என்ற எரிமலை வெடிப்பதைத் தடுக்க முடியுமா? சண்டமாருதத்தைத் தேக்கி விட முடியுமா? அதே போன்று ஒரு புராதன ஜாதி தூக்கத்தினின்று விழித்து சுதந்திரக் கிளர்ச்சி செய்வதை யாரால் நிறுத்தி விட முடியும்?

ஆறாயிரம் மைல்களுக் கப்பாலுள்ள வெள்ளை மாளிகையில் வீற்றிருக்கும் ஒரு ஸாமுயேல் ஹோர் என்பார் இந்தியாவின் கயிறுகளைப் பிடித்து ஆட்டுகின்றதற்கு இனி இந்தியா இடம் தராது. 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உதவியில்லாவிடில் இந்தியா அழிந்து போகும்' என்ற துக்குறிக் குரல்களுக்கும் இனி இந்தியர் செவிசாய்க்க மாட்டார்கள். "அப்படியே இந்தியா நாசமானாலும் ஆகட்டும்! இதற்காக இங்கிலாந்துக் குழந்தைகள் மனமுருக வேண்டாம்" என்று இந்திய தேச பக்தர்கள் கூறுகின்றனர்.

ஆனால் வெள்ளை மாளிகையின் விநோத அதிகாரியான ஸாமுயேல் ஹோர், 'இந்தியாவின் நலத்துக்காக' அவரது இதயம் மிகவும் கரைவதாகச் சமீபத்தில் பேசி யிருக்கின்றார். என்ன கரிசனம்! என்ன அக்கரை! இந்த வார்த்தைகளால் ஸாமுயேல் ஹோர் தன்னை ஏமாற்றிக் கொள்கின்றாரா, அல்லது ஊரை ஏமாற்றப் பார்க்கின்றாரா என்பது விளங்க வில்லை. இந்தியாவின் க்ஷேமலர்பங்களில், இந்த ஜன்ம பூமியில் பிறந்த ஒரு ஸத்புத்திரன் அக்கரை காட்டுவானா, அல்லது உத்யோக காரணத்தால் வெள்ளை மாளிகையில் குந்திக் கிடக்கும் ஒரு ஆங்கிலேயன் சிரத்தை காட்டுவானா?

36 கோடி மக்களடங்கிய இந்த நாட்டின் தலை யெழுத்தை யார் நிர்ணயிப்பது? ஏதோ ஒரு சில குலாமிகளும் சில வெள்ளையர்களும் கூடி கட்டுப் பார்லிமெண்டு கமிட்டியில் குந்தி 'வெள்ளைக் கடுதாசியை' ஆராய்ந்து விட்டதால் இந்தியாவின் தலை யெழுத்தை நிர்ணயித்து விட முடியுமா? அந்தக் கமிட்டி எவ்வாறிருக்கப் போகின்றது என்ற வண்டவாளம் வெளிவந்து விட்டது. அன்று சிமையில் பீல் பிரபு என்பான் பிரபுக்கள் சபையில் பேசியபோது, "பார்லிமெண்டு கமிட்டியில் தீவிரவாதிகளான சர்ச்சில், லாயிட் பிரபு போன்றாருக்கும் இடமிருக்க வேண்டும்" என்று கூறி யிருக்கிறார். ஒரு சர்ச்சில் அந்த கமிட்டியி லிருந்தால் என்னவாகுமென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

மிதவாத அன்னாத்தைகளுக்குச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றோம். வெறுமனே பம்பாயில் கூடி 'காந்தியை விட்டு விடு; வட்ட மேஜை மட்ட ரகம்" என்று தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் பலன் ஒன்றுமில்லை. பிரிட்டிஷார் எப்போதும் செய்கைக்கு மதிப்பு தருபவர்களே யன்றி வார்த்தைகட்கு பயப்படுபவர்களல்ல. அந்த நியதியை அறிந்தால் மிதவாதிகள் ஒரு காரியம் செய்யலாம். கூட்டுக் கமிட்டி, குழம்புக் கமிட்டி முதலிய எதிலும் சேர முடியாதென்று சர்க்காருக்கு உடனே எச்சரிக்கை செய்யலாம்.

மிதவாதிகளே! உஷார்! ஜாக்ரதை! வலை விரிக்கப்பட்டு விட்டது! நீங்களே அதில் தலையைக் கொடுக்கப் போகின்றீர்களா? அல்லது சுய மரியாதையை உணர்ந்து விலகி நிற்கப் போகின்றீர்களா?

தர்மம் காட்டும் பாதை

புதிதாகத் தோன்றியுள்ள "ஹரிஜன்" என்ற பத்திரிகையில் காந்திஜி எழுதியிருப்பதாவது :-

"நான் அனுஷ்டித்து வரும் தர்ம மென்னமோ ஒன்றுதான். ஆனால் பல சந்தர்ப்பங்களில் அதைப் பல வகைகளில் அனுஷ்டிக்க வேண்டி யிருக்கிறது. ஒரு உதாரணம் சொல்கிறேன் பாருங்கள். பட்டினி கிடக்கும் ஒருவன் மீது நான் அன்பு கொண்டு அவனுக்கு உணவளிக்கிறேன். அடுத்தாற் போல் என் குழந்தை இருக்கிறது; அளவு கடந்து சாப்பிட்டு விட்டதால் அது நோயால் அவஸ்தைப் படுகிறது. ஆகவே அது தின்னுவதற்கு வேண்டுமென அழுதால் கூட அதன்பால் எனக்குள்ள அன்பின் காரணமாகவே நான் அதைப் பட்டினி போடுகிறேன். இவ்விரண்டு செய்கைகளும் அன்பு காரணமாக எழுந்தவையே.

"நான் இன்று ஒத்துழையாமையையே அனுஷ்டித்து வருகிறேன்; இந்த அனுஷ்டான முறையிலேயே நான் எனது இயக்கத்திற்குச் சர்க்காரிடத்திலும், சட்ட சபைகளினிடத்திலும் உதவியை நாடுகிறேன்."

இலுப்பைப் பூ ரீடிங்

கண்ணோ குருடு; காதோ செவிடு; அப்பேர்ப்பட்ட ஒருவன் பேச்சுப் படத்தைப்பற்றி வருணித்தால் எப்படியிருக்கும்? இந்தியாவைப் பற்றி எள்ளளவும் அறியாதவர்கள் சீமையிலுள்ள லார்டுகள்! அந்தப் பிரபுக்கள் தங்கள் சபையில் (House of Lords) இந்தியாவைப் பற்றிப் பேசிய அழகு இந்த உபமானத்திற்குத் தான் பொருத்தமானதா யிருந்தது. இந்த உளறல் கோஷ்டியில் ஒரு ஆள், 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை'யாக விளங்கினர். அவர் தான் மாஜி வைஸ்ராயான ரீடிங் பிரபு.

"வட்ட மேஜை மகாநாட்டை என்னென்று புகழ்வது? எந்தப் பாதையில் முன்னேறிச் செல்ல வேண்டுமென இந்தியர்கள் விரும்புகிறார்களோ அதே பாதையை நாம் வழி காட்டினோம். ஆயினும் நமக்குள்ள அதிகாரங்களையும் இறுத்திக் கொண்டோம். வைஸ்ராய்களுக்கு அபாரமான ஸர்வாதிகாரம் இருக்குமாறு ஏற்பாடு செய்திருக்கும்போது நமக்கென்ன பயம்?" என்று இந்த இலுப்பைப் பூ ரீடிங்கின் வாய் மணத்தது.

இது என்ன பித்தலாட்டம்! இந்தியர்கள் விரும்பும் பாதையையா வட்ட மேஜை காட்டிற்று? இது சுத்தப் பொய். இந்தியர்கள் விரும்புவது சுதந்திரமென்னும் சுத்தமான பால். ஆனால் வட்ட மேஜையின் பயனாக 'வைஸ்ராய்க்கு 'சர்வாதிகாரம்' என்ற வெள்ளைச் சுண்ணாம்புத் தண்ணி தயார் செய்யப் பட்டுளது. சுத்தப் பாலும் சுண்ணாம்புத் தண்ணீரும் ஒன்றென்னலாமா? இந்தியர்களின் பிறப்புரிமைகளை நசுக்குவதற்காக வைஸ்ராய்களுக்கு ஸர்வாதிகாரத்தைத் தந்துள்ள ஓர் அரசியல் இங்கு யாருக்கு வேண்டும்? நிற்க,

கடைசியில் ரீடிங் பிரபு ஸாமுயேல் ஹோரைப் புகழ்ந்து ஓர் அஷ்டோத்ரம் பாடினர். "வட்ட மேஜை மகா நாட்டில், நமது ஸாமுயேல் ஹோர் இந்தியர்களுக்கு முன்னே ஒரு தயாளு போல நடந்து கொண்ட போதிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நலத்தில் துளியும் விட்டுக் கொடுக்காது பாடுபட்டார்" என்று புகழ்ந்தார். ரொம்ப சரி! "வட்ட மேஜையில் இந்தியர்களுக்கு பகிரங்கமாக பட்டை நாமம் சாற்றியவர் ஹோர்" என்று இந்த இலுப்பைப் பூ ரீடிங் பிரபு சொல்லியிருந்தால் விஷயம் பிரபுக்களுக்கு பதிந்திருக்குமன்றோ!

ஹோரின் சவடால்

"என்னைப் புகழ்ந்து கொண்டிருங்கள்; அல்லது திட்டிக் கொண்டாவது இருங்கள். இரண்டும் எனக்கு ஒன்று போலத் தான். ஆனால் என்னை மட்டும் ஒரு போதும் மறந்து விடாதீர்கள்" என்று ஒரு நாடகக்காரி சொன்னாளாம். அந்த நாடகக் காரியைப் போல, எப்போதும் தம்மைப் பற்றி உலகம் பேசிக் கொண்டிருக்குமாறு ஏதாவது உளறுவது இந்தியா மந்திரியான ஸர் ஸாமுயேல் ஹோர் என்பாரின் இயற்கைக் குணம்.

"சில வருஷங்களில் இந்திய துரைத்தனத்தில் ஏதேனும் மாறுதல்கள் செய்தேயாகவேண்டும். இந்தியா சம்பந்தமான பொறுப்புகளையும் நாம் விட்டு விடலாகாது. ஐர்லாந்தில் நடந்தது போல இந்தியாவிலும் நடக்க இடந்தரலாகாது. இந்தியர்களுக்கு அநுதாபம் காட்டுகின்ற முயற்சியில், பிரிட்டிஷாரின் நலங்களையும், ஏகாதிபத்தியத்தின் நன்மைகளையும் துளியளவும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை" என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவைக் காப்பாற்றும் பொறுப்பைக் கடவுள் தங்களிடத்திலேயே ஒப்படைத்திருப்பதாக ஆங்கிலேயர் தற்புகழ்ச்சி பேசிக் கொள்வது வழக்கம்; அதே ரீதியில் பேசிய ஸாமுயேல் ஹோர், "இந்தியாவின் நலத்தையும் காப்பேன்; பிரிட்டிஷாரின் நன்மையையும் கவனிப்பேன்" என்று கூறுவது, 'பாலுக்கும் காவல் காப்பேன்; பூனைக்கும் தோழனா யிருப்பேன்' என்று கூறுவது போலிருக்கிறது.

பிறகு பிரமாதமாக பிரிட்டிஷாரை எச்சரிக்கை செய்து ஹோர் பேசுகின்றார். "காரியம் முற்றிப் போவதற்கு முன்னாடியே இந்தியாவுக்கு வேண்டியவைகளை நாம் செய்து விட வேண்டும். இந்தியாவில் நமக்குள்ள சிநேகிதர்களுக்கு வெறுப்பு ஏற்படாதவாறு நாம் நடந்து கொள்ள வேண்டும்" என்று கூறியுளார்.

இவருடைய சிநேகிதர்கள் யார் என்பது நமக்குத் தெரியவில்லை. ஸாப்ரூ போன்ற மிதவாதிகளுக்குக் கூட இவரிடம் புளிப்புத் தட்டி விட்டது. இந்தியர்களின் க்ஷேமத்தையும், பிரிட்டிஷாரின் க்ஷேமத்தையும் கோருகின்ற ஒரே ஒரு சிநேகிதர் தான் உலகத்தில் இருக்கிறார். அவரைப் பிடித்து எரவாடா சிறையில் போட்டிருக்கிறார்கள். அந்த நண்பரின் ஆசீர்வாதமில்லாவிட்டால் எந்தப் பாச்சாவும் இந்தியாவில் பலிக்காது என்பதை ஹோர் அறிவாரா?

உபவாசம் சட்ட விரோதமா?

சர்க்கார் அதிகாரிகளில் சிலர் குயுக்தியே அவதார மெடுத்தாற் போலிருக்கிறார்கள். உதாரணமாக பம்பாய் உள்நாட்டு மந்திரி சட்ட சபையில் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும் போது,

"சிறையில் கைதிகள் உபவாச மிருப்பது ஜெயில் சட்டத்தை மீறியது தான்" என்று கூறினார். அப்படியானால் அவர் மகாத்மா காந்தியின் உபவாசத்தையும் சட்ட விரோத மான தென்று கருதுகின்றாரா? வெளி யுலகத்தோடு யாதொரு சம்பந்தமு மின்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு கைதி தனது உணர்ச்சிகளை உலகுக்கோ, அல்லது அரசாங்கத்துக்கோ காட்ட வேண்டுமாயின் வேறென்ன செய்வது?

'சட்டம்' என்பது உலகில் ஏன் நுழைந்தது? உலகோருக்குள் ஓர் ஒற்றுமையும், கட்டுப்பாடும் உண்டாக்கி நன்மை விளைவிப்பதற்காகவே சட்டங்கள் ஆதி காலத்தில் தோன்றின. தமது உபவாசத்தால் உலகத்துக்கு நன்மை உண்டு என்று மகாத்மாஜி எப்போது எண்ணினாரோ, அப்போதே அவர் விரதத்தை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும். அதுதான் ஆண்டவனின் 'சட்டம்'. அரசாங்கங்களின் சட்டங்களும் உலகின் க்ஷேமத்தைக் கோரியதாகவே இருக்க வேண்டு மன்றோ! நன்மை விளைவிக்கும் பல செய்கைகளை 'இது சட்ட ரீதியாகச் சரியன்று' என்று சொல்லி விடுவது பிரிட்டிஷ் சர்க்காரின் முட்டுக் கட்டைத் தொழிலாகும். 'கள்ளுக் குடிக்காதே' என்று கடை வாயிலில் நின்று கும்பிடுவதை மறியல் சட்டத்தின் கீழ் தற்போது தடுத்திருக்கின்றனர். மறியல் செய்வது சட்ட ரீதியாகத் தவறு என்கின்றனர். ஆனால் இதே மறியலை மூன்றாம் வருடத்தில் இர்வின் ஒப்பந்தம் அநுமதித்தது. அப்போது சட்டம் விழுந்து குளறவில்லை. இப்போதோ சட்டம் வேறு விதமாகி விட்டது. சட்டம் என்ன மூட்டைகளைத் தூக்கும் ஒரு கழுதையா? இடத்திற்குத் தகுந்தபடி வர்ணம் மாறும் பச்சோந்தியா?

'சிறையில் உபவாச மிருப்பது சட்ட ரீதியாகத் தப்பிதமே' என்று கூறுகின்ற அந்த மந்திரி சில கைதிகளுக்கு அதற்காகத் தண்டனை கொடுத்திருப்பதாகவும் சொன்னார். காந்தியடிகள் உண்ணா விரத மேற்றபோது பாரத மக்களனைவரும் பதறியது போலவே சிறையிலுள்ள காங்கிரஸ் வீரர்களும் பதறினர். காந்திஜியின் உபவாசத்துக்கு அநுதாபம் காட்டுவதற்காக உபவாச மிருந்தனர். அந்த உபவாசம் இருந்ததற்காக அவர்களைச் சிறையதிகாரிகள் தண்டித்திருக்கிறார்கள். மாதா மாதம் கைதியைக் கண்டு பேச உறவினர்களை அநுமதிப்பதென்பது சிறையில் ஒரு உரிமை. அவ் வுரிமையை பம்பாய்ச் சிறை யதிகாரிகள் ஒரு மாதத்திற்கு பிடுங்கி விட்டார்களாம். அதுதான் உபவாஸமிருந்ததற்காகத் தரப்பட்ட தண்டனை! இது வெகு விந்தையாயிருக்கிறது.

உபவாச வேகத்துக்கு ஆதி காரணராயிருந்த மகாத்மாவிடம் இந்தச் சட்ட பூச்சாண்டியைக் காட்டி ஷெ மந்திரி நர்த்தனம் செய்யவில்லை. டெல்லி அரசாங்கமோ கொஞ்சம் மூளையோடு காந்திஜிக்கு அதிகமான பேட்டிகள் தருவதற்கும், வாக்குவாதங்கள் நடத்துவதற்கும் அநுமதித்தது. ஆனால் அதே சமயத்தில் பம்பாய் மாகாண மந்திரி உபவாஸமிருந்த இதர காங்கிரஸ் கைதிகளை தண்டித்திருக்கிறார்.

'பேக்கன்' என்ற ஆங்கில ஆசிரியன் ஓரிடத்தில் பின்வருமாறு எழுதி யிருக்கிறான்:

"சட்டம் என்பது சிலந்தி வலை போன்றது; பெரிய ஜந்துக்கள் அவ்வலையைத் தாண்டிச் சென்று விடும். ஆனால் சிறிய ஜந்துக்களை அது பிடித்துக் கொண்டு விடும்" என்று வருணித்திருக்கிறான். அதே மாதிரி தானிருக்கிறது பம்பாய் ஜெயில் சட்டமும்! புருஷோத்தமனை காந்திஜியின் உபவாசத்தை இந்த ஜெயில் சட்டப் பூச்சாண்டி ஏதும் செய்யாதிருக்கும் போது, இதர காங்கிரஸ் வாதிகளை மட்டும் அது தாக்குவானேன்?

'சிறைப்பட்ட பின்பு சிறைச் சட்டங்களை மீறலாகாது' என்ற உபதேசத்தை தேச மக்களுக்குச் சொல்லி வருபவர் காந்திஜி. அவருடைய சீடர்களும் அதை அனுசரித்தே நடந்து வருகின்றனர். ஆனால் காங்கிரஸ்காரர்கள் மீது எப்போதும் அருவருப்புக் கொண்ட காமாலைக் கண்ணர்களோ எதற்கும் "சட்டத்தை மீறி விட்டார்கள்" என்று கூக்குரலிடுகின்றனர். இப்படியாக சட்டம் சந்தி சிரிக்க வேண்டுமோ?

காந்தியின் போர் ஆயுதம்

மகாத்மாவின் போர் முறைக்கு “ஸாத்விக எதிர்ப்பு” எனப் பெயர். இந்தியப் புராதன தெய்வீக நூல்களில் விழுந்து புரண்ட இந்தியருக்கு இந்தப் போராயுதம் புதிதல்ல. ஸத்தியாக்கிரஹ தத்துவத்தை அடிப் படையாகக் கொண்டதே ஸாத்விக எதிர்ப்பு. ஆதிகாலந் தொட்டு இந்தியா ஸத்தியாக்கிரஹ தர்மத்தை அனுஷ்டித்து வருகின்றது. மனிதருக்கு மனிதரோ அல்லது தேசத்துக்குத் தேசமோ எதிர்த்துச் சண்டையிட நேரிடுகையில், மிருக சக்தி தாண்டவமாடுவதற்குச் சற்றும் இடமேயில்லை என்பதை ஸத்தியாவதாரமாக விளங்கும் மகாத்மா உலகிற்குப் போதித்து வருகின்றார். தென்னாப்பிரிக்காவில் அவரது ஸாத்விக எதிர்ப்புக் கேற்பட்ட வெற்றிக்குப் பின்னர், மறத்திமிரில் ஆழ்ந்து கிடக்கும் ஐரோப்பிய நாடுகளும் அந்த ஆயுதத்தின் மகிமையைச் சிறிது சிறிதாக உணர்ந்து வருகின்றன. “ஆரியன் பாத்” (ஆரியர் வழி) என்ற மாசிகையில் திரு ஜார்ஜ் காட்வின் என்ற ஐரோப்பியர் வெளியிட்டுள்ள பின் வரும் கருத்துக்களே மேற்கூறிய உணர்ச்சியின் அறி குறியாக விளங்குகின்றன. அவர் கூறி யிருப்பதாவது:

“மனிதன் போரிடும் ஜந்து. ஆனால் மிருக சக்திக்குப் பதிலாக ஆத்ம சக்தியைத் துணையாகக் கொண்டு அவன் போரி லிறங்குகையில், போர் மிகுந்த புனிதத் தன்மை பெற்று விடுகின்றது. அந்த ஆத்ம சக்தி முன்பு எதிராளியின் மிருக சக்தி ஸ்தம்பித்து நிற்கின்றது. இந்த ஆத்ம சக்தியின் எதிர்ப்பையே இப்பொழுது மனிதர்கள் ‘ஸாத்விக எதிர்ப்பு’ என அழைக்கிறார்கள். இப்போர் முறையைக் கண்டு மேனாட்டினர் கேலி செய்த காலமுமுண்டு. ஆனால் உலகில் மறத் திமிரை அழித்து அறத்தை நிலை நாட்ட இதுவே தக்க ஆயுதமென்பதை அவர்களே இப்பொழுது ஒப்புக் கொள்ளுகிறார்கள். துப்பாக்கி, வெடிகுண்டு, போலீஸ் படை, ஸைன்யம், பீரங்கிகள், ஆகாயப் படை யாவும் ஆன்ம வலி படைத்த இப் போராயுதத்தின் முன் எம்மாத்திரம்? இந்த ஸாத்விக எதிர்ப்பின் கர்த்தாவாக இன்று உலகில் விளங்குபவர் மகாத்மா காந்தி.”

திப்புவின் தலைப்பாகை

சரித்திர பூர்வமானதும், விசேஷ விலை மதிப்பானதுமான இந்திய ஞாபகச் சின்னங்களில் பல இந்தியாவின் கரையை விட்டுப் போயிருக்கின்ற துயரக் கதையை நாம் அறிவோம். மொகலாய சக்கரவர்த்திகளின் கோஹினூர் வைரமும், மயிலாசனமும் இன்று முறையே சீமையிலும், பாரஸீக நாட்டிலு மிருந்து வருகின்றன. சிவாஜிக்கு அன்னை பவானி அளித்த வீர வாள் இன்று பிரிட்டிஷ் மியூஸியத்தில் சிறைப்பட்டுக் கிடக்கிறது. தன்னுடைய புராதன மன்னர்கள் உபயோகித்து வந்த அபூர்வமான வஸ்துக்களைத் தன் தேச மக்கள் கண்டு மகிழும்படி தன்னிடமே வைத்துக் கொள்ள ஒவ்வொரு தேசத்திற்கும் உரிமை யுண்டு. ஆனால் தன்னுடைய ராஜீய உரிமைகளுடன் இந்தியா இந்த உரிமையையும் இன்று இழந்து கிடப்பதால் எவ்வளவோ சரித்திர சம்பந்தமான அரிய பொருள்களை இழந்து வருகின்றது

மேற்படி பொருள்கள் மட்டும் தான் இந்தியாவை விட்டுச் சென்றதாக நினைக்க வேண்டாம். ஏனெனில் மைசூரை ஆண்ட திப்பு சுல்தானின் சிகப்புத் தலைப்பாகையும் இப்பொழுது சீமையிலேயே இருப்பதாகச் செய்தி கிடைத்துளது. சாகும் வரையில் இந்தத் தலைப்பாகை திப்புவின் தலையை அலங்கரித்து வந்ததாம். பின்னர் இது ஸ்ரீரங்கப்பட்டணத்தை விட்டு சீமைக்குப் பிரயாணமான கதை தனிப்பட்டது. ஸ்காட்ச் ராணுவப் படையைச் சேர்ந்த ஹ்யூ மிச்செல் என்ற போர்த் தலைவனிடம் அது அகப்பட்டுக் கொண்டதாம். கொஞ்ச நாட்களுக்கு அந்தத் தலைப்பாகையை யணிந்து அவன் “நான் தான் திப்பு” வென அட்டகாசம் பண்ணினானோ என்னமோ தெரியவில்லை. அந்த மிச்செல் இன்று இல்லை. அவனுடைய சந்ததியார்களில் ஒருவளாகிய எடின்பரோவிலுள்ள மிஸஸ். இங்கிலிஸ் என்பவள் சமீபத்தில் தான் அதை லண்டன் நகரிலுள்ள “இந்தியா ஹவுஸ்” பொருட்காட்சிச் சாலைக்கு வழங்கினாளாம். கோஹினூரையும், மயிலாசனத்தையும், சிவாஜியின் வீர வாளையும், திப்புவின் தலைப்பாகையையும் இவை போன்ற இன்னும் எண்ணற்ற நமது சரித்திரச் சின்னங்களையும் ஸ்வதந்திர இந்தியாவில் தான் நாம் மீண்டும் காண முடியும் அல்லவா?

விளம்பரமா? நன்கொடையா?

ரயில்வே கம்பெனிக்காரர்கள் பெரிய மதப் பிரசாரகர்களாக இருக்கின்றனர். உலகத்தார் அநியாயமாகப் புண்ணியங்களை இழந்து போகின்றனரே என்று கரைகின்றனர். 'நாகூர் கந்தூரியை நாடி ஓடுங்கள்,' 'மகா மகத்திற்குப் போனால் மகா புண்யம்' என்றும் கொட்டை யெழுத்துக்களில் பத்திரிகைகளில் விளம்பரங்கள் காணப்படுகின்றன. வட இந்தியாவில் சர்க்கார் நிர்வாகத்திற்குட்பட்ட ரயில்வேக்களும் இத்தகைய பெரிய பிரசாரத்தி லீடுபட்டிருக்கின்றன. அந்த விளம்பரங்கள் சம்பந்தமாக டெல்லி சட்ட சபையில் ஓர் கேள்வி தோன்றிற்று. சில பத்திரிகைகளுக்கு தரப்படுவது விளம்பரப் பணமா, நன்கொடைப் பணமா வென்பதை விளக்க வேண்டுமென்பதற்காகவே கேள்விகள் கேட்கப்பட்டன.

“மாக மேளம், கும்ப மேளம், சிவராத்ரி மேளம் முதலியவைகளைப் பற்றிய யாத்திரை விளம்பரங்கள் 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகையில் தோன்றுவது வாஸ்தவமா? ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையை யாத்ரீகர் படிப்பதில்லை யென்பதையும் இந்தியப் பத்திரிகைகளையே படிக்கின்றன ரென்பதையும் சர்க்கார் அறிவார்களா? சர்க்காருக்குத் தெரியுமாயின் இந்த விஷயத்தில் 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகைக்கு சலுகை காட்டுவானேன்? இந்த விளம்பரங்களை இந்தியப் பத்திரிகைகளில் போடலாகாதோ? எந்த இந்தியப் பத்திரிகையிலாவது அவ் விளம்பரங்கள் போடப்படுகின்றனவா?” என்று எஸ். ஸி. மித்ரா கேள்வி கேட்டார்.

'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகை ஒரு வெள்ளைக்காரப் பத்திரிகை. அப்பத்திரிகை படிப்பவர்களில் பெரும்பாலோருக்கு 'மாக மேளம்' என்றால் என்னவென்றே தெரியாது. ரம்ஜானுக்கும் ராமசாமிக்கும் என்ன சம்பந்தம்? காதர் மியானுக்கும் கார்த்திகைக்கும் யாது சம்பந்தம்? அதே மாதிரி 'ஸ்டேட்ஸ்மனுக்கும்' கும்பமேளா வென்ற ஹிந்து பண்டிகைக்கும் என்ன சம்பந்தம்? 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகைக்கு இத்தகைய விளம்பரங்கள் ஏன் கிடைக்கின்றது என்பது சொல்லாமலே விளங்கக் கூடியது. ஆனால் சர்க்கார் அதிகாரி மேற்படி கேள்விகளுக்கு என்ன பதில் தந்தார் தெரியுமா?

“கிழக்கு வங்காள ரெயில்வேக் காரர்களுக்கு எழுதி பதில் வரவழைக்கின்றேன்” என்றார் அதிகாரி. எந்த யுகத்தில் பதில் வருமோ! யார் கண்டது?

“ராஜா பெண் கண்ணாலம்”

ராஜபுதனத்தில் மிக முக்கியமான சுதேச ராஜ்யமாகிய 'கிஷன்கரை' ஆளும் மகா ராஜாவின் குமாரிக்குக் கல்யாணம் நடக்கப் போகின்றதாம். அந்தக் கல்யாணத்திற்காக பிரஜைகளெல்லாம் பணம் தர வேண்டுமோம். ஏழைகளா யிருந்தாலும் சரி, பணக்காரனா யிருந்தாலும் சரி ஒவ்வொரு குடும்பமும் மூன்று ரூபாய் விதம் தந்தேயாக வேண்டுமாம். பசுவோ எருமையோ வைத்துக் கொண்டிருப்பவர்கள் ரூபாய்க்கு 1½ சேர் வீதம் நெய் ஸப்ளை செய்ய வேண்டுமாம். விளையும் நிலமாயினும் சரி, விளையாத நிலமாயினும் சரி ஒரு ஏகராவுக்கு சுமார் 5 ரூபாய் வீதம் எல்லாக் குடியானவர்களும் கொடுக்க வேண்டுமாம். இந்த ராஜா நல்ல சமயம் பார்த்தாரையா? ஊரெல்லாம் வறுமையால் வாடிக் கொண்டிருக்கும் போது, இதரர் செலவில் இவர் பெண்ணுக்குக் கல்யாணம் ஆக வேண்டுமோ? பண்டைக் காலத்தில் பணமில்லாத ஏழைக் குடிகளுக்கு அரசர்களே கல்யாணம் செய்து வைத்தார்களென்று சொல்வார்கள். இந்தக் காலத்தில் ராஜாக்கள் குடிகளிடம் அதிகாரப் பிச்சை வாங்கி தங்கள் கல்யாணங்களை நடத்துகிறார்கள். என்ன விபரீதம்!

பர்மாவிலும் இதே கதி

இந்தியாவைப் போல் பர்மாவும் தன் தங்கத்தை ஏராளமாகப் பறி கொடுத்து விட்டுத் தவிக்கின்றது. இந்த விஷயத்தை, பர்மா அரசாங்கப் பொக்கிஷ மெம்பரே அன்று வரவு செலவு திட்டத்தை ஆஜர் செய்கையில் சட்ட சபையில் வெளியிட்டார். 1931-ம் வருஷத்தில் தங்கத்தை விற்றதால் பர்மாவுக்கு 5½ கோடி ரூபாய் கிடைத்ததாம். ஆனால் 1932-ம் வருஷத்திலோ 1½ கோடிதான் கிடைத்ததாம். இதற்குக் காரணமென்ன வென்று ஆராய்ந்து பார்த்ததில் தேசத்தில் தங்கம் குறைந்து விட்டது தான் எனத் தெரிய வந்ததாம். “விவசாயிகள் நீண்ட காலமாகப் பத்திரப் படுத்தி வைத்திருந்த தங்க ஆபரணங்க ளெல்லாம் விற்கப்பட்டு விட்டன” என்று அவர் கூறினார். இந்த மாதிரி நாட்டின் தங்க மெல்லாம் இழக்கப்படுவதைப் பொறுப்பு வாய்ந்த எந்தத் துரைத்தனமாவது தடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்குமா?

பலே பம்பாய்!

தாழ்த்தப்பட்டவர்களின் குறைகளைத் தீர்த்து வைப்பதற்காக பம்பாயில் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியார் சில சிபார்சுகளைச் செய்து சர்க்காருக்கு அனுப்பினர். அவற்றை ஏற்றுக் கொண்டு பம்பாய் கவர்ன்மெண்டார் கீழ்க் கண்ட தங்கள் முடிவுகளை வெளியிட்டிருக்கின்றனர்:—

"ஆரம்ப, நடுத்தரப் பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாக நாம் ஏற்கனவே தீர்மானம் செய்து விட்டோம். ஆஸ்பத்திரிகளைப் பற்றிய மட்டில், வைத்திய சிகிச்சை செய்வதில் ஜாதி, மத பேதங்களைப் பாராட்டாமலிருக்குமாறு கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிகளிலுள்ள வைத்தியர்களுக்கு உத்தர விட்டிருக்கிறோம். பொதுக் கிணறுகள் விஷயத்தில் எல்லா ஜாதியினருக்கும் சமத்துவத்தை ஏற்படுத்த முற்படாத ஸ்தல ஸ்தாபனங்கள் விஷயத்தில் கிராம ஜல சப்ளைக்கான கிராண்டுகள் குறைக்கப்படும். "எல்லா ஜாதியினரும் தாராளமாக உபயோகிக்கலாம்" என்று அவைகள் பொதுக் கிணறுகளின் சமீபத்தில் பலகைகளைத் தொங்கவிட வேண்டும். கிணறுகளில் ஜாதி ஹிந்துக்களுக்காக ஒரு பக்கமும், தாழ்த்தப்பட்டவர்களுக்காக மற்றொரு பக்கமும் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். குளங்களி லிறங்க இரண்டு வழிகளிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. எல்லா ஜாதியார்களும் சரிசமமாக உபயோகிப்பதாக விருந்தால் மட்டுமே பொதுக் கிணறுகள், குளங்கள், தர்மசாலைகள் ஏற்படுத்த சர்க்கார் நிலங்களைக் கொடுக்குமாறு ஸ்தல ஸ்தாபனங்கள் கேட்கும் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படும்."

சென்னை உள்பட மற்ற மாகாண கவர்ன்மெண்டுகள் மட்டும் தூங்கிக் கொண்டிருப்பானேன்? தானாக எதுவும் செய்யாமல் போனாலும் இவ்விஷயமாக ஏற்கனவே சென்னை சட்டசபை நிறைவேற்றி வைத்துள்ள தீர்மானத்தை யாவது சென்னை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வரக் கூடாதா?

"மிதவாதிகளுக்கும் பே! பே!"

புதிய சீர்திருத்தங்களின் அழுகு நாற்றம் இந்திய மிதவாதிகளின் மூக்கையும் அடைக்கின்றது. வட்ட மேஜையின் முடிவைத் தாங்கள் ஏற்க முடியாதென்றும், அவை சுத்த அதிருப்திகரமானவை என்றும், மகாத்மா உள்பட எல்லா ராஜீயக் கைதிகளையும் விடுவிப்பதே விமோசனத்திற்கான மார்க்கமென்றும் முன்னமேயே அவர்களில் பலர் கையொப்பமிட்டு ஒரு அறிக்கையை விடுத்தனர். இப்பொழுது சில தினங்களுக்கு முன்பு பம்பாயில் நடந்த பெருங் கூட்டத்திலும் அவர்கள் அதே அபிப்பிராயத்தைத் தான் வெளியிட்டனர். பழுத்த மிதவாதியான ஸர் சிமன்லால் ஸெடால்வட் இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். ஸர் கோவிந்தராவ் பிரதன், ஸர். எம். விஸ்வேஸ்வரய்யா, ஸ்ரீயுத மதுரதாஸ் வாஸன்ஜி, எச். பி. மோடி, ஆர். பி. மாஸானி, ஜே. கே. மேத்தா போன்ற மிதவாதப் பிரமுகர்களெல்லாம் கலந்து கொண்டனர். புதிய சீர்திருத்தங்களில் அதிருப்தியைத் தெரிவித்தும், ராஜீயக் கைதிகளின் விடுதலையைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

"தேசத்தின் அரும் பெரும் தலைவர்கள் எல்லாம் சிறைக் கம்பிகளுக்குப் பின் அடைபட்டுக் கிடக்கையில் ஜனங்களுக்குள் என்னமாக அதிருப்தி நீங்கி, அமைதி ஏற்படும்?" என்று பம்பாய் கவர்ன்மெண்டில் முன்பு அங்கத்தினராக விருந்த கோவிந்த பிரதன் கேட்டார்.

ஆர். பி. மஸானியின் பேச்சுக்கள் குறிப்பிடத் தக்கவை: "ராஜீயக் கைதிகளின் விடுதலையைக் கோருகையில் நாங்கள் காங்கிரஸ்காரர்களின் சார்பில் பேசுவதாகத் தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. காங்கிரஸ் வாதிகள் எங்கள் ஆதரவுக்காகக் காத்திருக்கவில்லை. நாங்கள் தலையிட வேண்டுமென்பதில் ராஜீயக் கைதிகளும் கவலை கொள்ளவில்லை. ஆயினும் தேசத்தின் நன்மையை உத்தேசித்து நாங்களாகவே அவர்களை விடுவிக்கும்படி கோருகிறோம்."

மிதவாதிகளுக்கும் சர்க்கார் "பே! பே!" காட்டப் போகின்றதா?

நமது கிளிஞ்சல் குவியல்

சென்னையில் சுயேச்சை தினத்தன்று கைது செய்யப்பட்டவர்களில் 12 பேருக்கு தலா 3 மாதம் கடுங்காவல்.

சிலோன் போட் மெயிலை நிறுத்தி துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக அப்துல் ஹமீத் என்பவர் கைதியானுர்.

கோயமுத்தூரில் தண்டனை யடைந்த ஒருவரின் அபராதத் தொகைக்காக அவரது மாடுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

விருதுநகர் ரயில்வே பிளாட்ப்பாரத்தில் ராமநாதபுரம் ஜில்லா மகா நாடு கூடியிருந்த போது 8 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

கள்ளக்குறிச்சி தாலுக்காவில் கள்ளுக்கடை ஏலத்தன்று பஜனையுடன் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ரங்கராஜன், முனியாண்டி இருவரும் போலீசாரால் பந்தோபஸ்தில் வைக்கப் பட்டனர்.

மன்னார்குடியில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ரமணியும், கேசவ மேனனும் கைது செய்யப்பட்டார்கள்.

சங்கிலியைப்பிடித்து ரயிலை நிறுத்தியதற்காக மதுரையில் 3 தொண்டர்கள் கைதியாயினர்.

சிறை சென்ற தர்மபுரி நாராயணசாமி அய்யருடைய 50 ரூ. அபராதத்துக்காக அவருடைய சொத்தை ஏலம் போட்டதில் ஒருவரும் எடுக்க முன் வராததால் ஏலம் நிறுத்தப்பட்டது. ஒரு பிரமுகர் அபராதத்தை கட்டி விட்டாராம்.

மதுரையில் "சத்தியாக்கிரக அச்சுக்கூட"த்தின் சொந்தக்காரரென்று கூறிக் கொண்டு ஒரு ஆலமரத்தடியில் பஹிரங்கமாக சைகுளோஸ்டைல் இயந்திரத்தில் ஸ்ரீமான் ரங்காச்சாரி துண்டுப் பிரசுரங்கள் தயாரித்தாராம்.

திருநெல்வேலிக்கு கவர்னர் போயிருந்த போது டவுனில் ஹர்த்தால் (கத வடைப்பு) நடந்தது. திறக்கும்படி அதிகாரிகள் வேண்டியும் திறக்கப்படவில்லை. கோபுரங்களின்மீது கறுப்புக் கொடியும் போடப்பட்டிருந்ததாம். கவர்னர் மோட்டார் முன் மறியல் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் நின்றுகொண்டிருந்த சுப்பா ரெட்டியார் கைதியானுர்.

கான்பூரில் மறியல் செய்ததற்காக கைது செய்யப்பட்ட ஒருவருக்கு பதினைந்து சவுக்கடி கொடுக்கும்படி தண்டனை விதிக்கப்பட்டது.

பெஷாவரில் மர்தன் காங்கிரஸ் கமிட்டி ஆபிஸைச் சோதித்து சில கடிதங்களையும் கைப்பற்றி, காரியதரிசி சுல்தான் கானையும் கைது செய்தனர்.

ஐக்கிய மாகாண காங்கிரஸ் சர்வாதிகாரி சேத் தாமோதர தாஸுக்கு இரண்டு வருஷக் கடுங்காவலும், 50 ரூ. அபராதமும். ஊர்வலம் நடத்தியதற்காக இரண்டு ஸ்திரிகளுக்கு தலா 6 மாதம் கடுங்காவலும் 50 ரூ. அபராதமும்.

சுயேச்சை தின சம்பந்தமாக காதக்கில் மூவருக்கு 18 மாதமும், ஒருவருக்கு 12 மாதமும் கடுங்காவல் தண்டனை. இன்னும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

பயங்கர இயக்கத்தில் சம்பந்தப் பட்டவர்களை சர்க்காருக்கு காட்டிக் கொடுத்தால் கிராமத்துக்குப் பொதுவாக விதித்திருக்கும் தண்ட வரிகளை ரத்து செய்து விடுவோம் என்று சிட்டகாங் மாஜிஸ்திரேட்டு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறுர்.

அப்பாசாகிப் பட்டவர்த்தன் உண்ணு விரதமிருப்பதை அநுசரித்து தாங்களும் விரதமிருக்கப் போகிறீர்களா என்று ஒருவர் கேட்டதற்கு, மகாத்மாஜி, கவர்ன்மெண்டாரிடம் தகவல் கேட்டிருக்கிறேன். என் முன்பு பூறுத் தகவலும் இல்லாதிருக்க இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாதென்று கூறி விட்டார்.

சில காலமாக கள்ளக்குறிச்சி, சின்ன சேலம், ஆத்தூர் முதலிய விடங்களில் தென்னை மரங்களில் கட்டப்பட்டுள்ள கலயங்களில் கள் இறங்குவதில்லை. காந்தியின் சாபமோ என்று ஜனங்கள் பேசிக் கொள்ளுகின்றனர். ஒரு மாத காலத்துக்குள் கள் பானைகள் தானுகவே உடைந்து போகின்றன என்றும் ஒருவர் எழுதுகிறுர்.

வெளி நாட்டிலிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் அரிசிக்கு இறக்குமதி வரி போட வேண்டுமென்று டெல்லி சட்ட சபையில் ஒருவர் தீர்மானம் கொண்டு வருகிறுர்.

குண்டூர் ஜில்லாவில் ஒரு கிராமக் கோவில் ஹரி ஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டது.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.